**கொலொன்ன பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 02 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 05 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 20 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொலொன்ன பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 01 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பின்வரும் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) காசுப்பாய்ச்சல் கூற்று

(ii) முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பினை உள்ளடக்கிய அட்டவணை

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்குரித்தாக கிடைக்கவேண்டிய நீதிமன்றத்தண்டப் பண வருமானத்தில் மேலதிகமாகக் கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 158,383 தொகை திரண்ட நிதியத்தின் மூலம் பதிவழிப்பதற்குப் பதிலாக அந்தக் கணக்கின் மொத்த மீதியான ரூபா 1,152,552 தொகை மீளாய்வாண்டின் போது திரண்ட நிதியத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் இறுதியில் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 994,169 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முத்திரைக் கட்டணப் பதிவேட்டின் படி மீளாய்வாண்டில் இனங்காணப்பட்ட பற்றுச்சீட்டிடப்பட்ட முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 899,680 ஆக இருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட ரூபா 2,500,000 மொத்தத் தொகையும் ஆண்டின் வருமானமாகக் காண்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 1,600,320 இனால் குறைவடைந்திருந்தது.

(இ) முத்திரைக் கட்டண பேரேட்டுக் கணக்கின் ஆரம்ப மீதி ரூபா 1,004,451 தொகைக்கும் ஆண்டின் போதான முத்திரைக் கட்டண பெறுவனவுகள் ரூபா 3,149,775 இற்குமிடையேயான வேறுபாடு ரூபா 2,145,324 தொகை மீளாய்வாண்டின் போது இனங்காணப்படாமல் திரண்ட நிதியத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஈ) வருமானப் பதிவேட்டின் படி மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான வாகனங்களை வாடகைக்கு விட்ட வகையில் பெறப்பட்ட வருமானம் ரூபா 329,625 ஆக இருந்த போதிலும் இறுதிக் கணக்குகளில் 3-25 வருமானத் தலைப்புக்களில் அதன் வருமானம் ரூபா 300,400 ஆகக் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 29,225 தொகையான வருமானம் குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் செலவின விடயத்திற்குரிய ரூபா 54,230 தொகையான பொறுப்புக்கள் 2013 ஆம் ஆண்டின் கடன்கொடுத்தோரில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக ஆண்டின் இறுதியில் கடன்கொடுத்தோர் மீதி அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) ஏக்கர் வரி, ஏனைய வருமானம் மற்றும் நீர்க்கட்டணம் பேரேட்டு கணக்குகளில் காணப்பட்ட மீதிகளும் அதற்குரிய பதிவேடுகளில் காணப்பட்ட மீதிகளுக்கும் இடையே ரூபா 27,552 தொகையான வேறுபாடு இனங்காணப்படாமல் திரண்ட நிதியத்தின் மூலம் சீராக்கப்பட்டிருந்தது.

(எ) செலவினப் பேரேட்டின் படி களஞ்சியப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 366,394 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்தப் பெறுமதி களஞ்சியப் பேரேட்டுக் கணக்கின் மூலம் பயன்படுத்தப்பட்ட பொருட்கள், செலவினம் செய்யப்பட்ட செலவினத் தலைப்பின் பிரகாரம் வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும், செலவினங்கள் நேரடியாக செலவினத் தலைப்புக்களில் வரவு வைக்கப்பட்டிருந்தது. அதன் படி இந்த கணக்கீட்டு வழுவின் காரணமாக பொதுக் களஞ்சியம் (நுகர்வுப் பொருட்கள்) கணக்குகளில் பிழையான மீதியொன்றாக தோற்றம் பெற்றிருந்தது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

06 கணக்கு விடயங்களுக்குரிய 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,393,322 ஆக இருந்ததுடன் உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,799,594 ஆக இருந்தமையால் வேறுபாடு ரூபா 593,728 ஆகும். மேலும் 02 செலவின விடயங்களுக்குரிய செலவினப் பேரேட்டிற்கும் பிரதான பேரேட்டிற்கும் இடையே ரூபா 250,558 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 14,018,959 கூட்டுப்பெறுமதியான 04 விடயங்கள் தொடர்பான சான்றுகள் இன்மையால் கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் |
|---|---|---|
| | இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை - 1992 | |
| (i) | நிதிப்பிரமாணம் இலக்கம் 371(2) | ரூபா 87,010 கூட்டுத்தொகையான முற்பணம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் இலக்கம் 571 | 2008 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 381,778 தொகையான வைப்புக்களை அரசாங்க வருமானத்திற்கு எடுக்காமல் தொடர்ச்சியாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |
| (iii) | நிதிப்பிரமாணம் இலக்கம் 1645 | 07 வாகனங்களுக்கான ஓட்ட அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,678,397 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,234,240 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| ------------------- | ------------- | ------------- | ------------- |
| | ரூபா | ரூபா | ரூபா |
| | (000) | (000) | (000) |
| வீதவரியும் வரியும் | 17 | 6 | 11 |
| வாடகை | 2,833 | 2,641 | 192 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 715 | 268 | 447 |
| ஏனைய வருமானம் | 6,030 | 3,597 | 2,433 |

**2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

---------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முத்திரைக் கட்டண வருமானமாக 2010 செப்தெம்பர் மாதம் முதல் 2013 மார்ச் மாதம் வரையிலான காலத்தில் காணிப் பதிவாளர் மூலம் கிடைக்க வேண்டிய ரூபா 61,800 தொகை கணக்காய்வுத் திகதியான 2014 ஏப்ரல் 09 ஆந் திகதி வரையிலும் நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) எம்பிலிபிட்டி மாவட்ட நீதிமன்றத்தின் மூலம் நீதிமன்றத் தண்டப்பண வருமானமாக கிடைக்க வேண்டிய பணம் 2013 யூலை மாதத்தின் பின்னர் சபைக்கு அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 வாடகை**

--------------------

31 கடைகளுக்குரிய நில வாடகைக்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்ததுடன் அதில் 16 கடைகளிலிருந்து அறவிடவேண்டிய பணத்தை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

----------------------------------------------

மீளாய்வாண்டில் கைத்தொழில் வரி, வியாபார வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்களுக்குரிய அறவீடுகளில் நிலுவையாக இருந்த 63 சந்தர்ப்பங்களுக்காக ரூபா 360,125 தொகையான நிலுவை காணப்பட்ட போதிலும் வருமானத்தை அறவீடு செய்யும் வகையில் போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 வியாபார வரி**

---------------------

வியாபார வரிகள் அறவிடவேண்டிய தொழில் முயற்சிகளை இனங்காண்பதற்காக வருடாந்த மெய்மையாய்வு கணக்காய்வுத் திகதியான 2014 ஏப்ரல் 08 ஆந் திகதி வரையிலும்

மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் நிறுவனத்திற்குச் சேருகின்ற வருமானத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு வருமானப் பதிவேடு பேணப்பட்டிருந்தது.

### 2.2.6 ஏனைய வருமானம்

கொலொன்ன நீர் உத்தேசத்திட்டத்தில் 108 நீர்ப்பாவனையாளர்களிடமிருந்து ரூபா 70,734 தொகையான நிலுவைப்பணம் 2013 திசெம்பர் 31 வரையிலும் அறவிடுவதற்காக போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமாக 38 மயான நிலங்கள் காணப்பட்டதுடன் அதில் 15 இன் நில அளவை நடவடிக்கைகளுக்காக நில அளவைத் திணைக்களத்திற்கு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும் எஞ்சிய 23 மயான நிலங்களின் அளவை நடவடிக்கைகளுக்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1960 ஆம் ஆண்டின் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரதேசத்தில் 36 வீதிகள் பெயர் குறிப்பிடப்பட்டதன் பின்னர் 02 வீதிகள் சபைக்கு கையேற்கப்பட்டது தவிர இந்தப் பிரதேசத்தில் புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட வீதிகளை இனங்கண்டு சபைக்கு கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

மீளாய்வாண்டின் போது ரூபா 100,000 பெறுமதியுடைய மின் பிறப்பாக்கி கொள்வனவு செய்யப்பட்டு பிரதேசத்தின் 07 தொண்டர் அமைப்புக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் கொள்வனவு நடைமுறைகள் பின்பற்றப்படாதிருந்ததுடன் மின்பிறப்பாக்கிகளை பொருட் பதிவேட்டில் பதிந்து விநியோகக் கட்டளை மூலம் உரிய அமைப்புக்களுக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. தொண்டர் அமைப்புக்களினால் முறையாக பொருள் கையேற்கப்பட்டமைக்கான கையொப்பப் பதிவேடும் காணப்படவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் 5(7) இன் பிகாரம் நிதி மற்றும் களஞ்சியம் தொடர்பாக போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது 22 செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட ரூபா 8,590,000 தொகையான நிதிஒதுக்கீட்டில் எவ்வித செலவினமும் செய்யப்படாது சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக 23 செலவின விடயங்களுக்குரியதாக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் ரூபா 39,414,831 தொகை சேமிக்கப்பட்டிருந்ததுடன் 16 செலவின தலைப்புக்களுக்குரியதாக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டை விஞ்சி ரூபா 1,402,295 செலவினம் செய்யப்பட்டிருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்